# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.9180/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 24.09..2009</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எம். சுல்தான்<br>13வது வார்டு, 53–சி மில் பள்ளிவாசல் தெரு<br>கோவில்பட்டி<br>தூத்துக்குடி – 628 501. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்<br>சேப்பாக்கம்<br>சென்னை – 5. |

---------

இவ்வாணையத்தில் இன்று (24.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. எம். சுல்தான் அவர்களும், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலருக்காக திரு. வி. பிச்சை, கூடுதல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களும் வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 10.11.08 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு (நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை, தலைமைச் செயலகம், சென்னை–9) அனுப்பிய மனுவில் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகர்மன்றத்தை கலைத்துவிட்டு புதிய தேர்தல் நடத்தி புனரமைப்பு செய்யவும் மேற்படி 42

பார்வைகளை ஆய்வு செய்து சட்டப்படியான நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக சில தகவல்களை கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப் பெறாததால், சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 08.01.09 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 17.04.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 07.02.09 அன்று தகவல்களை வழங்கியதாக இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். ஆனால், மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய தகவல்கள் சரியில்லையென்று இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவலை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் 25.9.09க்குள் மனுதாரருக்கு அனுப்பி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலை இவ்வாணையத்திற்கு 01.10.09க்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 06.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.9180/09</u>

பொதுத் தகவல் அலுவலர்
நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
சேப்பாக்கம்
சென்னை – 5.

திரு. எம். சுல்தான்
13வது வார்டு, 53–சி மில் பள்ளிவாசல் தெரு
கோவில்பட்டி
தூத்துக்குடி – 628 501.